www.tamilarangam.net

# வரலாறாக மாறிவிட்ட வணக்கத்துக்குரியவர்களே !

போராளிகள் புதைக்கப்படவில்லை விதைக்கப்படுகின்றார்கள்

## கறுப்பு ஜூலையின் — வெளிச்சங்களே உங்களுக்கு மரணமில்லை — நினைவாக..!

எங்கள் மண்ணில் வசந்தத்தை வரவழைப்பதற்காக எங்கள் தோழர்கள் இருளில் புதைக்கப்பட்டார்கள். ஆனலும் அலைக்கரங்கள் ஆர்ப்பரிக்க ஆயிரம் கோடிசூரியர்களாய் அவர்கள் உதயமாவார்கள். வெளிச்சங்களான அவர்களுக்கு என்றுமே மரணமில்லை. ஆம் தமிழமும் உள்ளவரை எங்களது தோழர்களின் தியாகங்கள் என்றென்றும் நினைவுகூரப்படும்.



எந்த இலட்சியத்திற்காக எமது தோழர்கள் உயிரை விட்டார்களோ, எந்தமக்களின் விடுதலைக்காக அவர்கள் இரத்தம் சிந்தினர்களோ, அந்த தமிழீழ இலட்சியத்தை, அந்த தமிழீழ மக்களின் விடுதலையை பெற்றுக்கொடுப்பது ஒன்றுதான், நாம் எமது தோழர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.





அடிவானமில்லாத விடிவெள்ளிகள் விடிவிற்காகவே — தங்கள் முடிவை மாற்றாமல் வாழ்வை முடித்த வசந்தங்கள்.







விடுதலைப்பாதையை எமக்குக்காட்டவே வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட விரியாத மொட்டுக்கள்.







எமது மக்களே எம்மைப் புரட்சியாளர்கள் ஆக்கியுள்ளார்கள்.

"சாவுக்கு மத்தியில் தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற நீங்கள், எமது விடுதலைக்காக இரத்தம் சிந்தி உயிர்விட்ட உங்கள் பிள்ளைகளை ஒரு கணம் நினைத்துப்பாருங்கள். எங்களது நாடு விடுதலை அடையவேண்டும் என்பதற்காக, தங்களையே அர்ப்பணித்து உழைத்துக் கொண்டிருக்கின்ற, உங்கள் பிள்ளைகளான எங்கள் தோழர்கள் மீது ஆணையிட்டுக் கூறுகின்றோம். நாங்கள் ஐக்கியப்படுவோம். கைகோர்த்து நின்று ஒருமித்துப் போராடுவோம். எமது பொது எதிரியின் சூழ்ச்சியை முறியடிப்போம்!"

— தோழர் உமா.

வரலாறாக தம்மை விட்டுச்சென்ற அனைத்துப் போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும், எமது கண்ணீர் அஞ்சலியை சமர்ப்பிக்கின்றோம்

## ☆ அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம் ☆

Published by People's Liberation Organisation of Thamil Eelam, 46 Central Road, Worcester Park, Surrey KT4 8HY, UK

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்